செ.வெ.எண்.636 நாள் 28.07.2010

# ஐ.டி.ஐ.தேர்வு ரத்து

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்படும் ஐ.டி.ஐ–களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வுகள் 23.7.2010 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இத்தேர்வுகள் தமிழகம் முழுவதும் 125 அரசு மற்றும் தனியார் தேர்வு மையங்களில் நடைபெறுகின்றன. தேர்வு மையங்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை துணை வட்டாச்சியர் ஆகியோர் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு தேர்வுகள் பாதுகாப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 28.7.2010 அன்று நாளிதழில் 28.7.2010 அன்று நடைபெற இருந்த பிட்டர் தொழிற்பிரிவிற்கான தேர்வு வினாத்தாட்கள் வெளியானதாக செய்தி வெளியிடப்பட்டது. இது அரசின் கவனத்திற்கு வந்த நிலையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பேரில், வினாத்தாட்கள் தமிழகத்தில் வெளியானதா அல்லது இத்தேர்வுக்கான வினாத்தாட்கள் இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக உள்ளதால், வேறு மாநிலங்களிலிருந்து வரப்பெற்றதா என்பதற்கான விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 28.7.2010–ல் நடைபெறுவதாக இருந்த இரண்டு வருட அனைத்து தொழிற் பிரிவுகளுக்கான கருத்தியல் தேர்வினை ரத்து செய்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. விரிவான விசாரணைக்குப் பின்னர் இதற்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரத்து செய்யப்பட்ட கருத்தியல் தேர்வு நடைபெறும் தேதி, தேர்வு வினாத்தாட்கள் தயார் செய்து தேர்வு நடத்தும் மத்திய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமை ஆணையர், புதுடெல்லியிடமிருந்து அனுமதி பெறப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சென்னை–32.

நாள்: 28/7/2010

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை